முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அநுமான் அருளிய அருள் பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

17.09.2019, செவ்வாய்க்கிழமை

1. **சோதி சூட்சும வழிபாட்டின் வழி**
**சுத்தநெறி காட்டி அருளுகின்ற**
**சோதி சூட்சும ஆளுமை ஞானி**
**சிவராஜ யோகி அரங்கன் பெருமை**
2. பெருமைதனை உலகம் ஏற்கவே
பேருலகே ஞான உலகாகுமெனக் கூறி
உறுதிபட **விகாரி யாளி திங்கள்**
**உயர்வான முப்பானோர் திகதி குசன் வாரம்**
**(விகாரி வருடம் ஆவணி மாதம் 31ம் தேதி, 17.09.2019, செவ்வாய்க்கிழமை)**
3. வாரமதில் அருள் பிரசன்ன ஆசியை
வழங்குவேன் **அநுமான் யானும்**
சோரமிலா ஞானயுகம் அமைய
சுப்பிரமணியர் சக்தியாக வந்தநல்
4. வந்தநல் அரங்கமகான் தனை
வணங்கி உலகமக்கள் வந்து
செந்தூரா சுப்பிரமணியர் என வேண்டி
சேவைதனை உலகெங்கும் பரப்பி
5. பரப்பியே உண்மைச் சீடர்களை
பாருலகமெங்கும் அனுப்பி இனிதே
அறம் வழிதனை அவசியமாக்கி
அன்னதானம் எங்கும் வளர வளர
6. வளரவே வல்லமைகள் கூடி
வடிவேலனே பிரணவக்குடிலில்
பலருக்கு குருவாக அமர்ந்து அருள
பரோபகாரம் பெருக்கி வரும்
7. வருகின்ற உண்மை வழியை
வந்து மக்கள் கலந்து பகிர்ந்து
தருகின்ற பொருளுதவியோடு
தன்னார்வ தொண்டும் பெருகியே
8. பெருகியே கலியுகம் தானும்
பிரச்சனைகளை வென்று நன்கு
முருகப்பெருமான் வழிபாட்டுடன்
முழுமையான சக்திகள் பரவி
9. பரவி உலகமக்கள் எல்லோரும்
பசிபிணியை விரட்டி இனிதே
துறவு போன்ற இல்லறம் ஞானியாக
தேசிகனருளால் உலக மக்கள்

10. மக்களெல்லாம் தேறி நின்று
மரணம் வெல்லும் பலமும்
தேக்கமின்றி கடைத்தேற்றமும்
தெய்வீகமும் அடைந்து சிறப்பர்

11. சிறப்பு தரும் குருவரங்கனே
சித்தி அருளும் ஞானதேசிகனே
மறுப்பிலா நீ தரும் வரமே
மக்களை கொண்டு பெரும் மாற்றம் ஆகும் அருள்பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அனுமான் அருளிய அருள் பிரசன்ன ஆசி நூலின் சாரம்**

ஆற்றல்மிக்க ஜோதி வழிபாட்டின் மூலமாக தூய ஞானநெறிக் கொள்கைகளை உலகிற்கு அருளி இவ்வுலகை ஞானத்தின் மூலமாக ஆட்சி செய்கின்ற உத்தம மகா ஞானி சோதி சூட்சும ஞானி சிவராஜயோகி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெருமைகளை உலகம் ஏற்றுக் கொண்டால் அரங்கரை குருவாய் ஏற்றுக் கொண்டால் இந்த உலகமே ஞான உலகமாக மாற்றம் அடையும் எனக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் ஆவணி மாதம் 31ம் நாள் 17.09.2019, திங்கட்கிழமையான இன்றைய தினமதனிலே அருள் பிரசன்ன ஆசிநூல்தனையே அநுமான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அநுமான்.

குற்றமற்ற நல்லுலகம் அமைந்திடவே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக வந்துதித்திட்ட மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனை உலக மக்களெல்லாம் பணிந்து வணங்கி செந்தூர் வேலனே சுப்பிரமணியனே என முருகப்பெருமானாக எண்ணி வணங்கி வருவதுடன் அரங்கன் ஆற்றுகின்ற தானதருமப் பணிகளை தமது பணிகளாக எண்ணி உலகமெங்கும் பரப்பிட வேண்டும்.

உலகமெங்கும் அரங்கனின் தருமங்களை பரப்பிடவே உத்தம சீடர்களை அனுப்பி உலகமெங்கும் தருமத்தின் வழிதனை அவசியமாக்கி அன்னதானத்தை உலகமெங்கும் வளர்ந்திட செய்கின்றார் ஆறுமுக அரங்கமகான். அன்னதான பணிகள் உலகமெங்கும் பரவி வளரவளர உலகமெங்கும் புண்ணியம் பெருகி வல்லமைகள் பெருகிடும்.

முருகப்பெருமானே சிவகுருநாதனாக அரங்கமகா தேசிகனார் வடிவினில் அமர்ந்து மக்களுக்கு சிறந்த சற்குருவாக ஆகி அருள் செய்து வருவதுடன் தமது தூயநெறிக் கொள்கைகள் மூலமாக பரோபகார சிந்தையையும் பெருக்கி வருகின்றார். பரோபகாரம் பெருக்கும் ஆறுமுக அரங்கமகானின் உண்மைநெறியை மக்களெல்லாம் ஏற்று பின்பற்றுவதுடன் அரங்கன் தருமம் வளர்ந்திட பொருளுதவிகளைச் செய்து வர வேண்டும். அரங்கனின் தருமத்திலே சுயநலம் இல்லாமல் பொதுநலத்துடன் நடந்து தன்னார்வ தொண்டினை செய்து வரவர, கலியுகமும் பிரச்சனைகளை எல்லாம் வென்று நல்யுகமாக ஆகும்.

ஞானத்தலைவன் முருகப்பெருமான் வழிபாட்டினை மக்களெல்லாம் செய்துவர, உலகமெங்கும் முருகப்பெருமானின் அருள் சக்தி பரவி, உலக மக்களெல்லோரும் உலகினில் உள்ள பசிப்பிணியை விரட்டி மக்களெல்லாம் துறவு போன்ற வாழ்வை வாழ்ந்து இல்லற ஞானியாக அரங்கமகா தேசிகனாரின் அருளால் உலக மக்களெல்லாம் தேறி நின்று மரணத்தையும் வெல்லுகின்ற வல்லமையும் பலமும் பெருகி தடையின்றி ஜென்மத்தினை கடைத்தேற்றம் அடைந்து தெய்வீகநிலையையும் அடைந்து சிறப்படைவார்கள்.

எல்லாவிதமான சிறப்புகளையும் தந்தருளும் குரு ஆறுமுக அரங்கமகா தேசிகனே சித்திகளை தந்தருளும் ஞானதேசிகனே தடையின்றி தாம் அருளுகின்ற வரங்களே இவ்வுலக மக்களின் மூலம் பெருமாற்றம்தனை அடைந்திடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அநுமான்.

–சுபம்–